1981 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை என்னுடைய அறையிலே கொண்டு வந்து கொடுத்தால் நான் அமைச்சர் அவர்களிடம் சொல்லி நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைக் கொடுத்த பொழுது **இப்படிச் சொன்னால் அந்தக் குற்றத்தைப் பற்றி யாரிடம் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம்தான் சொல்ல வேண்டும். என்னுடைய அறையில் வந்து சொல்லுங்கள். எழுதிக் கொடுங்கள். நான் நடவடிக்கை எடுக்கிறேன். திரு. பூங்காவனம் ** என்று கூறியதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. தகவல் கோரல்.

அ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 246-ன் கீழ் அவை உரிமை மீறல் பிரச்னை ஒன்றை எழுப்பியிருக்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் மீது நீங்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்னையைப் பற்றி, அவருக்குத் தெரிவித்திருக்கிறோம். பதில் வந்தவுடன் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருடைய குறைபாட்டின் காரணமாக மணச்சநல்லூரிலே 6-ம் தேதி போராட்டம் நடைபெற்றது குறித்து .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னை முடிந்து போய், இப்போது அங்கே மில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால்தான் அதை எடுக்கவில்லை.

ஆ. சென்னை நகரில் ஆபாசச் சுவரொட்டி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாகவே, சென்னை நகர சுவர்களில் ஆபாசமான, மிகவும் அருவருக்கத்தக்க, நாமெல்லாம் பார்த்து வெட்கப்படக்கூடிய சுவரொட்டி ஒன்று—

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் திரைப்பட சுவ ரொட்டி ஒன்றைப் பற்றி குறிப்பிடுகிறீகள் என்று நினைக்கிறேன் சென்சார் போர்டு மத்திய அரசி சம்மந்தப்பட்டது. மனித டைய பகுத்தறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞான அடிப்படையில் அப் படிப்பட்ட படங்கள் தகுதியானவை என்று நினைத்துத்தான் அனுமதித்திருக்கிறார்கள். இது ஒரு பெரிய பிரச்சனை யாகாது.

இ. அரசு பேருந்தில் ஜாஸ் இசை ஒலிபரப்பு பெறுவது.

திரு. உ. சுப்பிரமணியன் மான்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களிடமிருந்து பாதுகாப்பு கோருகிறேன், நேற்று இரவு திருச்சியிலேயிருந்து சென்னைக்கு சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸிலே வந்தேன். சூப்பர் டீலக்ஸ் பஸ்கள் சாய்ந்து உட்காரு வதற்கு சௌகரியமான வண்டி, அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இரவு முழுவதும் தூங்கவிடாமல், ஜாஸ் மியூசிக்கை உரக்க ஒலிபரப்பிக் கொண் டிருந்தார்கள். யாருமே தூங்க முடியவில்லை. அதை மாற்றுவ தற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது முடிவு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரயாணிகள் அது போன்ற வண்டிகளில் ஏறும்போதே ஸ்பீக்கர் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டுதான் ஏறுகிறார்கள். அந்த வகையில் அது வரவேற்கப்பட்ட முறை. உறுப்பினர் அவர்களுக்கும் இசையில் பெரு விருப்பம் இருந்தாலும், ஜாஸ் மியூசிக் பிடிக்க வில்லையோ என்னவோ தெரியவில்லை.

(முற்பகல் 9-50)

3 ஒத்திவைப்பு தீர்மானம்.

வறட்சியால் மாநிலம் பாதிக்கப்பெற்றிருக்கும்போது கூட்டுறவு கடன்களை வசூலித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், எஸ், ஆண்டித்தேவர்: சோ. அழகர்சாமி, இரா கருப்பையா, என்.ஏ. பூங்காவனம், ஏடி. கருப்பையா, ரா கிருஷ்ணன், என். வரதராசன், எம். செல்லமுத்து, எம். பழனி வேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் இரெ. இராசமா ணிக்கம் ஆகியோர்.

''தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட் டுள்ள இந்த நேரத்தில் கூட்டுறவு வங்கிகளும் நிலவள வங்கிகளும் விவசாயிகள் வாங்கியுள்ள பழைய கடன் பாக்கிகளுக்காக ஜப்தி நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல் களை ஒத்தி வைக்க வேண்டுமென்பது பற்றி